5th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) 1947-ம் ஆண்டு லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ் குற்றங்களை விசாரணை செய்வதற்காக, குற்றவியல் சட்டதிருத்தச் சட்டத்தின் 6-வது பிரிவின் (2) உட்பிரிவின் கீழ் சிறப்பு நீதிபதியாக நியமிக்கப்படுபவர், செஷன்ஸ் நீதிபதி அல்லது செஷன்ஸ் கூடுதல் நீதிபதி அல்லது செஷன்ஸ் உதவி நீதிபதியாக இருப்பவராகவோ அல்லது இருந்துள்ளவராகவோ இருக்க வேண்டும். எனவே, சென்னையில், செஷன்ஸ் நீதிபதியும், கூடுதல் செஷன்ஸ் நீதிபதியும், சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

THIRU D. SANTOSHAM : Sir, the officers who are tried for offence under the Prevention of Corruption Act are liable to a minimum punishment of one year's imprisonment and a fine of Rs. 1,000, and their entire life and career are affected. Considering the huge stake involved, is it not desirable that in the mofussil also, as in Madras City, Sessions Judges are appointed as special judges so that the trial of the case may be conducted in a very calm and better atmosphere of the sessions court rather than in the atmosphere of a magistrate's court, as is happening now?

THE HON. THIRU S. MADHAVAN: The Government have decided to take up this matter with the High Court.

Handloom Development Schemes

* 131 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Central Government had allotted funds under the Planning Scheme for handloom weavers towards share capital loan, purchase of implements and for financing Primary Weavers' societies as well as State Handloom Weaver's Society ; and

(*b*) if so, whether the funds so allotted were fully utilised by the State Government or whether any portion of the funds were lost as lapsed at the end of the last financial year ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு உதவி அளிப்பதற்கு வகுக்கப்பட்ட செயல்முறைப்படி கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ச் செய்த செலவுகள் இந்திய அரசிடமிருந்து பெறப்படுகின்றன. ஓர் ஆண்டிற்கும் ஆகும் செலவு, அந்த ஆண்டிற்கு அளிக்கப்பட்ட மத்திய உதவியைவிட அதிகமாக இருப்பதால், இந்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதி பயன்படுத்தப்படாது போவதற்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : Sir, is it a fact that funds are allotted under four ear-marked heads, namely, one for share capital loan, the second for improving weaving appliances, the third for propaganda and publicity, and the last for loans to primary weavers societies? And is it a fact that under the heading 'share capital loan', a sum of Rs. 12 lakhs was allotted for the year 1967-68, of which only Rs. 4 lakhs was utilised for this purpose?

[5th March 1969

THE HON. THIRU S. MADHAVAN: It is not correct to say that there are one or two schemes. I have got seventeen schemes for which there is a provision of Rs. 118 lakhs.

Handloom fabrics

* 132 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is a stagnation of handloom fabrics to the value of about one crore of rupees in Madurai and Ramanathapuram districts; and

(*b*) the reasons for such stagnation?

கைத்தறித் துணிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றனவா?

(இ) இந்தத் தேக்கத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) ஆம்.

(இ) அவை தேங்கிக் கிடப்பதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாகின்றன—

(1) தெற்கே உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளோடு போட்டிபோடும் வண்ணம் வட இந்தியாவில் உற்பத்தியாகும் விசைத்தறித் துணிகளை பெருமளவில் குவிப்பது.

(2) பயன்படுத்துவோரின் உடை முறை மாறியிருத்தல், அவர்கள் டெரிலின், நைலான் போன்றவற்றாலான ஆடை அணியத் தொடங்கியது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே. இதற்கு முன்னால் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கடராமன் அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்து பல்வேறு நாடுகளுக்கு தூது கோஷ்டிகளை அனுப்பி கைத்தறித் துணி தேங்கிக்கிடக்காமல் விற்பதற்கு ஏற்பாடு செய்தார். அதைப்போல முயற்சிகள் ஏதாவது இந்த அரசு எடுத்ததா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அப்போது நான் எதிர்க் கட்சியில் இருந்து கேட்டேன். அவர்கள் தந்த பதில், எத்தனை முயற்சிகள் எடுத்தும் காரியம் கை கூடவில்லை என்பதுதான். அப்போது வண்ணம் மாறும் துணி என்ற பாணியில் தயாரித்து அனுப்பி வந்தோம். அதன் பிறகு ஜப்பானில் அதேபோன்ற வண்ணம் மாறும் துணிகளை உற்பத்தி செய்து போட்டிக்கு வந்து விட்டார்கள். நமக்கு வெளிச் சந்தையில் இடம் இல்லாமல் போய்